**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை</u>**

முன்னிலை : திருமதி.என்.மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.
2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 17 ஆம் நாள் செவ்வாய்கிழமை
விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 03 ஆம் நாள்
ஆண்டுபட்டிகை வழக்கு எண்:19/2022

**வால்பாறை காவல் நிலைய குற்ற எண் :93/2022**

CNR NO: TNCB150001702022

குற்றமுறையிடுபவர் : அரசுக்காக:– காவல் ஆய்வாளர், வால்பாறை காவல் நிலையம், குற்ற எண்:93/2022.

எதிரிகளின் பெயர் : 1) பிரவீனா, க/பெ. மதனகோபால்,
2) தனுஷ்கிசன், த/பெ. மதனகோபால்,
கோ–ஆப்ரேட்டிவ் காலனி, வால்பாறை.
3) சரோஜா, க/பெ. அன்புராஜ்,
4)சாமிக்கண்ணு, த/பெ. ராஜீ,
5) ராக்கம்மாள், க/பெ.சேகர்,
6) லட்சுமி, க/பெ. சத்தியநாதன்,
7) சித்திரைகனி, க/பெ. சாமிக்கண்ணு,
8) செல்லம்மாள், க/பெ.காமராஜ்,
9) சித்ரா, க/பெ. ராஜேஷ்,
10) தேவி, க/பெ.யோகராஜ்,
11) பூபதி, த/பெ. ரவிசேகர்,
12) ஜெயராஜ், த/பெ. வேலு,
13) செல்வமணி, க/பெ. தமிழ்வாணன்,
14) காமராஜ், த/பெ. மணியப்பன்,
15) ஜெயக்கொடி, க/பெ.சின்னத்தம்பி,
16) ரஞ்சனி, க/பெ. உதயக்குமார்,
17) உதயக்குமார், த/பெ.மாரிமுத்து,
18) ஜெயா, க/பெ.லோகநாதன்,
19) சுந்தரி, க/பெ.மாசிலாமணி,
20) சிவபாக்கியம், க/பெ. மாது,
21) ராஜேந்திரன், த/பெ. ராஜீ,
22) விஜயக்குமார், த/பெ. சுரேஷ்,

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:11:31 +0530

23) கோபி, த/பெ. சத்தியநாதன்,
24) ரவிசேகர், த/பெ. சுப்ரமணியம்

| மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது. | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வ. எ ண் | வழக்கின் சுருக்கம் | | | | | |
| (i) | எதிரிகளின் அடைப்பு காவல் நாட்கள் | : | எதிரிகளின் பெயர் | | அடைப்பு காவல் நாள் | விடுவிப்பு நாள் |
| | | | 1 | 1) பிரவீனா, 2) தனுஷ்கிசன், 3) சரோஜா, 4)சாமிக்கண்ணு, 5) ராக்கம்மாள், 6) லட்சுமி, 7) சித்திரைகனி, 8) செல்லம்மாள், 9) சித்ரா, 10) தேவி, 11) பூபதி, 12) ஜெயராஜ், 13) செல்வமணி, 14) காமராஜ், 15) ஜெயக்கொடி, 16) ரஞ்சனி, 17) உதயக்குமார், 18) ஜெயா, 19) சுந்தரி, 20) சிவபாக்கியம், | – | – |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.10 18:11:39 +0530

17.03.2026 DM Cum JM
Valparai

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 21) ராஜேந்திரன்,<br>22)<br>விஜயக்குமார்,<br>23) கோபி,<br>24) ரவிசேகர், | | |
| (ii) | புகார் தாக்கல் செய்த நாள் மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | புகார் தாக்கல் செய்த நாள் | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | |
| | | | 19.04.2022 | 03.06.2022 | |
| (iii) | மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள் | : | - | | |
| (iv) | கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள் | : | 04.09.2025 | | |
| (v) | அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழான மனுவை தவிர. | : | குற்றவியல் பல்வகை மனு எண் . | மனு நாள் | முடிவு |
| | | | | | – |
| (vi) | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர் | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:11:46 +0530

17.03.2026

DM Cum JM
Valparai

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அ.சா.1 | மதனகோபால் | 24.09.2025 | 24.09.2025 |
| | | | அ.சா.2 | செந்தில்குமார் | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா.3 | வினோத்குமார் | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா.4 | பொன்னர் | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா.5 | பன்னீர்செல்வம் | 24.10.2025 | 24.10.2025 |
| | | | அ.சா.6 | ஈஸ்வரன் | 24.10.2025 | 24.10.2025 |
| | | | அ.சா.7 | சிம்சன் | 24.10.2025 | 24.10.2025 |
| | | | அ.சா.8 | ஜெயக்குமார் | 23.10.2025 | 23.10.2025 |
| | | | அ.சா.9 | சபரிமுத்து | 06.11.2025 | 06.11.2025 |
| | | | அ.சா.10 | குணசேகரன் | 25.11.2025 | 25.11.2025 |
| (vii) | கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரியிடம் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 24.02.2026 | | | |
| (viii) | எதிரி தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட விபரங்கள் | : | - | | | |
| (ix) | மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | : | அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்கள் | உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள் | முடிவு | |
| | | | - | - | - | |
| (x) | குற்றச்சாட்டு | : | கோவை மாவட்டம், வால்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட 1–ம் எதிரியின் கணவரும், வழக்கின் வாதி மற்றும் சாட்சி 1–க்கும் மனவேற்றுமை, கருத்து வேற்றுமை காரணமாக இருவரும் ஒருவர் மீது ஒருவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார்கள் கொடுத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டும் நிலுவையில் உள்ளதாகவும், வாதி, 1–ம் எதிரிவை விவாகரத்து செய்ய | | | |

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:11:53 +0530

17.03.2026 DM Cum JM
Valparai

நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், இந்நிலையில் வால்பறை குரங்குமுடி KGR எஸ்டேட்டின் உரிமையாளரும் வாதியும் நீதிமன்ற உத்தரவுப்படி தனது எஸ்டேட்டில் பணிகளை செய்ய முயன்றபோது 1-ம் எதிரி எஸ்டேட் தொழிலாளர்களை தன் பக்கம் சேர்த்துக்கொண்டு அவர்களை வாதி KGR எஸ்டேட்டில் வேலை செய்ய விடாமல் தடுத்தன் காரணமாக மேற்படி வாதி தனது எஸ்டேட் தொழிலாளர்களுக்கு வேலைக்கு ஏன் வரவில்லை என்றும் அதற்கான காரணம் தெரிவிக்கும் படியும் (Show Cause Notice) நோட்டீஸ் அனுப்பி அதற்கான பதிலை தொழிலாளர்கள் கொடுத்துள்ளதாகவும், இதனால் வாதிக்கும், எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் கருத்து வேறுபாடு இருந்ததுள்ளதாகவும், இந்நிலையில் 27.01.2022-ம் தேதி சுமார் 08.00 மணிக்கு வால்பாறை குரங்குமுடி KGR எஸ்டேட்டில் வாதி தனது எஸ்டேட் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, 1, 2 எதிரிகள் 3-ம் எதிரியின் தலைமையில் எஸ்டேட் தொழிலாளர்களான 4 மற்றும் 24-ம் எதிரிகள் மேற்படி வாதி இருந்த எஸ்டேட் காம்பவுண்டுக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளதாகவும், அவர்களில் 2, 4, 12, 14, 17, 21, 23, 24 எதிரிகள் தங்கள் கைகளில் தடி, கவாத்துக்கத்தி ஆகியவற்றை பின்புறம் மறைத்து வைத்துக்கொண்டு அத்துமீறி நுழைந்துள்ளதாகவும், 10 மற்றும் 18-வது எதிரிகள் வாதியை பார்த்து " ஏண்டா தேவிடியா மகனே நீ எப்படியடா எங்களுக்கு ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கலாம். உனக்கும் இந்த எஸ்டேட்டுக்கும் என்னடா சம்பந்தம் தாயோழி உன்னைத்தான் அம்மா எஸ்டேட்டுக்கு வரக்கூடாது என்று சொல்லியும் யார நக்கடா இங்க வந்த உன்னை விட்ட நீ இப்படித்தான் செய்வாய் உன்னை இங்கேயே அடித்து கொன்னாதா சரியா வரும் என்று கத்திக்கொண்டு 18-ம் எதிரி வாதி மீது காறிதுப்பி தன் கையால் வாதியின் நெஞ்சில் குத்தியும், வாதி கூட்டத்திலிருந்து தப்பி வால்பாறைக்கு போகலாம் என்று வண்டியில் ஏறிய போது எதிரிகள் அனைவரும் வாதியின் வண்டியை நகரவிடாமல் சிறை பிடித்து தடுத்து நிறுத்தியும், பின்னர் எதிரிகள் அனைவரும் வாதியை பார்த்து " இன்னைக்கு இவனை விடக்கூடாது

| | | | |
|---|---|---|---|
| | | | அடித்துக் கொல்லுங்கள்" என்று சத்தம் போட்டு மிரட்டியுள்ளார்கள் என்பதால் வாதி பயந்து போய் வீட்டிற்குள் கதவை சாத்திக்கொண்டுள்ளதாகவும், 1–ம் எதிரி எங்கள் மீது போட்ட FIR–ஐ வாபஸ் வாங்கினாதான் உன்னை இங்கிருந்து விடுவோம் என்று கூறி 1–ம் எதிரியும், மற்றவர்களும் வாதியை வீட்டிலிருந்து வெளியே செல்லவிடாமல் தடுத்துள்ள குற்றத்திற்காக 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் கீழ் |
| (xi) | எதிரிகளின் பதில் | : | குற்றவாளிகள் இல்லை, பொய் வழக்கு. |
| (xii) | நீதிபதியின் முடிவு | : | 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டுகள் பொறுத்து குற்றவாளிகள் இல்லை என முடிவு. |
| (xiii) | நீதிபதியின் தீர்ப்பு | : | 1. 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் கீழான குற்ற சாட்டுக்களை அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது |

| | | | |
|---|---|---|---|
| | | | இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் படி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச.பிரிவு. 248(1)-ன் கீழ் 1 முதல் 24 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்படுகிறது.<br><br>2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. |
| | | | |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 10.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. ராமசந்திரன், B.Sc., LLM., அரசு உதவி வழக்கறிஞர், நிலை-1 அவர்களும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. M.யுகேஸ், B.A., B.L., மற்றும் S.கண்ணன், B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கில் கோவை மாவட்டம், வால்பாறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட 1-ம் எதிரியின் கணவரும், வழக்கின் வாதி மற்றும் சாட்சி 1-க்கும் மனவேற்றுமை, கருத்து வேற்றுமை காரணமாக இருவரும் ஒருவர் மீது ஒருவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார்கள் கொடுத்து வழக்குகள் பதிவு

செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டும் நிலுவையில் உள்ளதாகவும், வாதி, 1–ம் எதிரிவை விவாகரத்து செய்ய நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், இந்நிலையில் வால்பறை குரங்குமுடி KGR எஸ்டேட்டின் உரிமையாளரும் வாதியும் நீதிமன்ற உத்தரவுப்படி தனது எஸ்டேட்டில் பணிகளை செய்ய முயன்றபோது 1–ம் எதிரி எஸ்டேட் தொழிலாளர்களை தன் பக்கம் சேர்த்துக்கொண்டு அவர்களை வாதி KGR எஸ்டேட்டில் வேலை செய்ய விடாமல் தடுத்தன் காரணமாக மேற்படி வாதி தனது எஸ்டேட் தொழிலாளர்களுக்கு வேலைக்கு ஏன் வரவில்லை என்றும் அதற்கான காரணம் தெரிவிக்கும் படியும் (Show Cause Notice) நோட்டீஸ் அனுப்பி அதற்கான பதிலை தொழிலாளர்கள் கொடுத்துள்ளதாகவும், இதனால் வாதிக்கும், எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் கருத்து வேறுபாடு இருந்ததுள்ளதாகவும், இந்நிலையில் 27.01.2022–ம் தேதி சுமார் 08.00 மணிக்கு வால்பாறை குரங்குமுடி KGR எஸ்டேட்டில் வாதி தனது எஸ்டேட் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, 1, 2 எதிரிகள் 3–ம் எதிரியின் தலைமையில் எஸ்டேட் தொழிலாளர்களான 4 மற்றும் 24–ம் எதிரிகள் மேற்படி வாதி இருந்த எஸ்டேட் காம்பவுண்டுக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளதாகவும், அவர்களில் 2, 4, 12, 14, 17, 21, 23, 24 எதிரிகள் தங்கள் கைகளில் தடி, கவாத்துக்கத்தி ஆகியவற்றை பின்புறம் மறைத்து வைத்துக்கொண்டு அத்துமீறி நுழைந்துள்ளதாகவும், 10 மற்றும் 18–வது எதிரிகள் வாதியை பார்த்து " ஏண்டா தேவிடியா மகனே நீ எப்படியடா எங்களுக்கு ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கலாம். உனக்கும் இந்த எஸ்டேட்டுக்கும் என்னடா சம்பந்தம் தாயோழி உன்னைத்தான் அம்மா எஸ்டேட்டுக்கு வரக்கூடாது என்று சொல்லியும் யார நக்கடா இங்க வந்த உன்னை விட்ட நீ இப்படித்தான் செய்வாய் உன்னை இங்கேயே அடித்து கொன்னாதா சரியா வரும் என்று கத்திக்கொண்டு 18–ம் எதிரி வாதி மீது காறிதுப்பி தன் கையால் வாதியின் நெஞ்சில் குத்தியும், வாதி கூட்டத்திலிருந்து தப்பி வால்பாறைக்கு போகலாம் என்று வண்டியில் ஏறிய போது எதிரிகள் அனைவரும் வாதியின் வண்டியை நகரவிடாமல் சிறை பிடித்து தடுத்து நிறுத்தியும், பின்னர் எதிரிகள் அனைவரும் வாதியை பார்த்து " இன்னைக்கு இவனை விடக்கூடாது அடித்துக் கொல்லுங்கள்" என்று சத்தம் போட்டு மிரட்டியுள்ளார்கள் என்பதால் வாதி பயந்து போய் வீட்டிற்குள் கதவை சாத்திக்கொண்டுள்ளதாகவும், 1–ம் எதிரி எங்கள் மீது போட்ட FIR–ஐ வாபஸ் வாங்கினாதான் உன்னை இங்கிருந்து விடுவோம் என்று கூறி 1–ம் எதிரியும், மற்றவர்களும் வாதியை வீட்டிலிருந்து வெளியே செல்லவிடாமல் தடுத்துள்ள குற்றத்திற்காக 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15,

16, 19, 20, 22−ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii)−ன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றமிழைத்திருப்பதாக வால்பாறை சார்பு ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு 173(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் இந்நீதிமன்றத்தில் எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு 17.06.2022 −ம் தேதி அன்று ஆண்டுபட்டிகை வழக்கு எண் 19/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு கு.வி.மு.ச.பிரிவு.204−ன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச.பிரிவு.207−ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய, முதற்நோக்கு முகாந்திரம் இருந்ததால் கு.வி.மு.ச.பிரிவு 240−ன் படி 1−ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24−ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18−ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22−ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து, எதிரிகளுக்கு புரியும்படி தமிழ் மொழியில் குற்றச்சாட்டை படித்துக்காட்டி விளக்கிகூறி வினவியபோது எதிரிகள் தான் குற்றவாளி இல்லை என்று மறுத்து, வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் இந்நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :−**

5. கடந்த 28.01.2022−ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் அ.சா.9 உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, அ.சா.1, அவரது ஓட்டுனரான அ.சா.8−ன் மூலம் கொடுத்து அனுப்பிய அ.சா.ஆ.1 புகார் மனுவை பெற்று நிலைய மனு ரசீது எண்.30/2022 பதிவு செய்து, மனுரசீதையும், அ.சா.ஆ.1 புகார் மனுவையும்

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.10 18:12:39 +0530

கோயம்புத்துார் சட்ட ஆலோசரிடம் கொண்டு சென்று கொடுத்துள்ளார். பின்னர், அ.சா.10, அ.சா.9 கொடுத்த ரசீது மீது மேல் நடவடிக்கை மேற்கொண்டு 11.04.2022–ம் தேதி வால்பாறை காவல் நிலைய குற்ற எண்.93/2022, சட்டப்பிரிவுகள் 147, 294(b), 348, 452, 506(2) இ.த.ச.வின் படி அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். மறுநாள் 12.04.2022–ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று அ.சா.4 மற்றும் அ.சா.8–ன் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1, அ.சா.2, அ.சா.3, அ.சா.5, அ.சா.6, அ.சா.7, அ.சா.4 மற்றும் அ.சா.8 ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர், எதிரிகள் முன்பிணை பெற்றுள்ளார்கள். பின்னர் மனு ரசீது வழங்கிய அ.சா.9–ஐ விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். 18.05.2022–ம் தேதி வழக்கின் சட்டப்பிரிவினை சட்டப்பிரிவுகள் 147, 294(b), 348, 452, 506(2) இ.த.ச.விலிருந்து சட்டப்பிரிவுகள் 148, 294(b), 348, 452, 506(2) இ.த.ச.வாக பிரிவு மாற்றம் செய்து, அ.சா.ஆ.7 பிரிவு மாற்றம் அறிக்கை தயார் செய்துள்ளார். அ.சா.10 புலன் விசாரணை முடித்து 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். புலன்விசாரணை குறித்து அ.சா.10–ன் சாட்சியத்தோடு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டுள்ளது.

6. அரசு தரப்பு சாட்சிகள் முடிவடைந்ததும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களை குறித்து எதிரிகளிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1) (b)–ன் கீழ் விசாரணை செய்த போது எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்று தெரிவித்து எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு எனவும் தெரிவிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**7. இரு தரப்பு வாதங்கள் கேட்டும். ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.**

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:12:44 +0530

17.03.2026 DM Cum JM
Valparai

**8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. 1-ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் படியான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு :-</u>**

9. இருதரப்பு வாதத்தின் அடிப்படையிலும் இந்நீதிமன்றம் வழக்கு கோப்பை பரிசீலனை செய்ததில்,

"1-ம் எதிரி, அ.சா.1-ன் மனைவியாவார். 1-ம் எதிரிக்கும் அவரது கணவரான அ.சா.1-க்கும் மனவேற்றுமை, கருத்து வேற்றுமை காரணமாக இருவரும் ஒருவர் மீது ஒருவர் வால்பாறை காவல் நிலையத்தில் புகார்கள் கொடுத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டும் நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப்பட்டும் நிலுவையில் உள்ளதாகவும், அ.சா.1-ம், 1-ம் எதிரியை விவாகரத்து செய்ய நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், இந்நிலையில் வால்பறை குரங்குமுடி KGR எஸ்டேட்டின் உரிமையாளரான அ.சா.1-ம் நீதிமன்ற உத்தரவுப்படி அ.சா.1 எஸ்டேட்டில் பணிகளை செய்ய முயன்றபோது 1-ம் எதிரி எஸ்டேட் தொழிலாளர்களை தன் பக்கம் சேர்த்துக்கொண்டு அவர்களை அ.சா.1-ஐ KGR எஸ்டேட்டில் வேலை செய்ய விடாமல் தடுத்தும், அ.சா.1-ம், எஸ்டேட் தொழிலாளர்களுக்கு வேலைக்கு ஏன் வரவில்லை என்றும் அதற்கான காரணம் தெரிவிக்கும் படியும் (Show Cause Notice) நோட்டீஸ் அனுப்பி அதற்கான பதிலை தொழிலாளர்கள் கொடுத்துள்ளதாகவும், இதனால் அ.சா.1-க்கும், எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் கருத்து வேறுபாடு இருந்ததுள்ளதாகவும், இந்நிலையில் 27.01.2022-ம் தேதி சுமார் 08.00 மணிக்கு வால்பாறை குரங்குமுடி KGR எஸ்டேட்டில் அ.சா.1- தனது எஸ்டேட் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, 1, 2 எதிரிகள் 3-ம் எதிரியின் தலைமையில் எஸ்டேட் தொழிலாளர்களான 4 முதல் 24-ம் எதிரிகள், அ.சா.1 இருந்த எஸ்டேட் காம்பவுண்டுக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளதாகவும், அவர்களில் 2, 4, 12, 14, 17, 21, 23, 24 எதிரிகள் தங்கள் கைகளில் தடி, கவாத்துக்கத்தி ஆகியவற்றை பின்புறம் மறைத்து வைத்துக்கொண்டு அத்துமீறி நுழைந்துள்ளதாகவும், 10 மற்றும் 18-வது எதிரிகள் அ.சா.1-ஐ பார்த்து " ஏண்டா தேவிடியா மகனே நீ எப்படியடா எங்களுக்கு ஷோக்காஸ் நோட்டீஸ் கொடுக்கலாம். உனக்கும் இந்த எஸ்டேட்டுக்கும் என்னடா சம்பந்தம் தாயோழி உன்னைத்தான் அம்மா எஸ்டேட்டுக்கு

வரக்கூடாது என்று சொல்லியும் யார நக்கடா இங்க வந்த உன்னை விட்ட நீ இப்படித்தான் செய்வாய் உன்னை இங்கேயே அடித்து கொன்னாதான் சரியா வரும் என்று கத்திக்கொண்டு 18-ம் எதிரி அ.சா.1 மீது காறிதுப்பி தன் கையால் அ.சா.1-ன் நெஞ்சில் குத்தியும், அ.சா.1- கூட்டத்திலிருந்து தப்பி வால்பாறைக்கு போகலாம் என்று வண்டியில் ஏறிய போது எதிரிகள் அனைவரும் வாதியின் வண்டியை நகரவிடாமல் சிறை பிடித்து தடுத்து நிறுத்தியும், பின்னர் எதிரிகள் அனைவரும் அ.சா.1-ஐ பார்த்து " இன்னைக்கு இவனை விடக்கூடாது அடித்துக் கொல்லுங்கள்" என்று சத்தம் போட்டு மிரட்டியுள்ளார்கள் என்பதால் அ.சா.1- பயந்து போய் வீட்டிற்குள் கதவை சாத்திக்கொண்டுள்ளதாகவும், 1-ம் எதிரி எங்கள் மீது போட்ட FIR-ஐ வாபஸ் வாங்கினாதான் உன்னை இங்கிருந்து விடுவோம் என்று கூறி 1-ம் எதிரியும், மற்றவர்களும் அ.சா.1-ஐ வீட்டிலிருந்து வெளியே செல்லவிடாமல் தடுத்துள்ள குற்றத்திற்காக 1-ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22-ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்திருப்பதாக எதிரிகளுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

10. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிரிகள் மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

11. எதிரி தரப்பில் கற்றறிந்த வழங்கறிஞர், 1-ம் எதிரி அ.சா.1-ன் மனைவி ஆவார், 2-ம் எதிரி அ.சா.1-ன் மகன் ஆவார். 3 முதல் 24 எதிரிகள் எஸ்டேட் தொழிலாளர்கள் ஆவார்கள். அ.சா.1-க்கும், எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு, சொத்து சம்பந்தமாக உள்ள குடும்ப பிரச்சனையை மனதில் கொண்டு, அ.சா.1 கொடுத்த தவறான புகாரின் அடிப்படையில் இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.1 அரசு தரப்பிற்கு முரண்பட்டு சாட்சியமளித்துள்ளார். அ.சா.5 முதல் அ.சா.7 சாட்சிகள் கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். அரசு தரப்பில் எதிரிக்களுக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை. எனவே, எதிரிக்களுக்கு எதிரான குற்றச்சாட்டிலிருந்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என வாதம் முன் வைத்தார்.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.10 18:13:00 +0530

12. இவ்வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், வழக்கு ஆவணங்களிலிருந்தும் 1–ம் எதிரி அ.சா.1–ன் மனைவி என்பதும், 2–ம் எதிரி அ.சா.1–ன் மகன் என்பதும், 3 முதல் 24 எதிரிகள் எஸ்டேட் தொழிலாளர்கள் என்பதும், அ.சா.1–க்கும், 1, 2 எதிரிகளுக்கு இடையே சொத்து தொடர்பான பிரச்சனை இருந்து வருகிறது என்பதும், 3 முதல் 24 எதிரிகளுக்கு அ.சா.1 எஸ்டேட் வேலைக்கு வராமல் இருந்ததாக அதற்கான காரணம் கோரி Show Cause Notice அனுப்பி அ.சா.1–க்கும், எஸ்டேட் தொழிலாளர்களுக்கும் முன்விரோதம் இருந்து வருவதும் தெளிவாகிறது.

13. அ.சா.1 நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்டவர் ஆவார். அ.சா.1, அ.சா.ஆ.1 புகார் கொடுத்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.1–ன் சாட்சியத்தையும், புகார் மனுவையும் ஒருசேர பரிசீலனை செய்கையில், அ.சா.1–ன் சாட்சியம் புகார் மனுவிற்கு முரணாக உள்ளது. அ.சா.1 சாட்சியத்தில், 1, 2 எதிரிகள் 3–ம் எதிரியின் தலைமையில் எஸ்டேட் தொழிலாளர்களான 4 முதல் 24 எதிரிகள் எஸ்டேட் காம்ப்பவுண்ட்டுக்குள் அத்துமீறி நுழைந்ததாகவோ, 2, 4, 12, 14,17, 27, 21, 23, 24 எதிரிகள் கைகளில் தடி, கவாத்துக்கத்தி ஆகியவற்றை பின்புறம் மறைத்து வைத்து அத்துமீறி நுழைந்ததாகவோ, 10 மற்றும் 18–ம் எதிரிகள் அ.சா.1–ஐ பார்த்து அசிங்கமாக பேசியதாகவோ, 18–ம் எதிரி அ.சா.1–ஐ பார்த்து காறிதுப்பி, கையால் நெஞ்சில் குத்தியதாகவோ, எதிரிகள் அனைவரும் அ.சா.1–ன் வண்டியை நகரவிடாமல் சிறைபிடித்து தடுத்து நிறுத்தியதாகவோ, எதிரிகள் குற்ற முறு கொலை மிரட்டல் விடுத்ததாகவோ இவரது சாட்சியம் இல்லை.

14. அ.சா.1–ன் தன் சாட்சியத்தில்,

" நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து, வால்பாறையில் KGR எஸ்டேட் நடத்தி வந்தேன். ஆஜர் 1–ம் எதிரி எனது மனைவி ஆவார். 2–ம் எதிரி எனது மகன் ஆவார். 3 முதல் 24 வரையிலான எதிரிகள் எனது எஸ்டேட்டில் பணிபுரிபவர்கள் ஆவார்கள். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக தேதி, மாதம் நினைவில்லை. ஒரு நாள் காலை 08.00 மணியளவில் நான் எனது எஸ்டேட்டில் இருந்த போது, எனது மனைவி, மகன் அங்கிருந்த தொழிலாளர்கள் அனைவரும் பிரச்சனை செய்தார்கள். என் வீட்டருகே ஒரு சிறிய அறை உள்ளது. அதனை நான் பூட்டி வைத்திருந்தேன். அந்த பூட்டை உடைத்து எதிரிகள் வேறு ஒரு பூட்டை போட்டிருந்தார்கள். நான் அதனை உடைத்து வேறு ஒரு பூட்டை போட்டேன். அந்த அறையில் எந்த பொருளும் வைக்கவில்லை. எதிரிகள் அந்த அறையில் மருந்தடிக்கும் மிசின் மற்றும் மருந்துகள் அதில் வைத்திருந்ததாக கூறினார்கள். அவற்றை நான்

திருடிக்கொண்டு வந்துவிட்டதாக என்னிடம் பிரச்சனை செய்தார்கள். நான் வீட்டிற்குள் சென்ற போது, எல்லோரும் வீட்டின் முன்பு வந்து நின்றார்கள். என்னை வெளியே வரவிடவில்லை. நான் 100-க்கு போன் செய்து புகார் வைத்தேன். அதன் பின்பு உதவி ஆய்வாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு ஓட்டுநர் அங்கு வந்தார்கள். அவர்கள் வந்தபின்பும், அவர்கள் கோரிக்கை விடுத்தும் எதிரிகள் என்னை வெளியே விடவில்லை. நான் இருந்த அறைக்கு வரும் பைப் லைனில் தண்ணீர் வரவில்லை. அதனையும் நிறுத்திவிட்டார்கள். எனக்கு உணவு கொடுப்பதற்கும், தண்ணீர் கொடுப்பதற்கும் ஆள் இல்லை. அதிகாலை 02.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர், தாசில்தார் மற்றும் வால்பாறை போலீசார், வாட்டர்பால்ஸ் போலீசார், முடீஸ் போலீசார், வனத்துறை அலுவலகத்திலிருந்து Gaurd சம்பவயிடத்திற்கு வந்தார்கள். காவல் துணை கண்காணிப்பாளர் சமரசம் பேசி என்னை அதிகாலை 03.00 மணிக்கு என்னை வெளியே விட்டார்கள். நான் பொள்ளாச்சிக்கு சென்றுவிட்டேன். மறுநாள் மீண்டும் வால்பாறை காவல் நிலையம் வந்து அ.சா.ஆ.1 புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையொப்பம் என்னுடையது. எதிரிகள் கையில் கட்டைகள் வைத்திருந்தார்கள். யாரும் என்னை தாக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள். " - என புகார் மனுவிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

15. கண்ணுற்ற சாட்சிகளாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2, அ.சா.3 தங்களது சாட்சியத்தில், அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்கள். அ.சா.2 சாட்சியத்தில், தான் அ.சா.1-ன் கார் ஓட்டுநராக இருப்பதாகவும், ஒரு நாள் காலை எப்போதும் போல் KGR எஸ்டேட்டிற்கு வேலைக்கு சென்ற போது, 08.30 மணியளவில் அ.சா.1-ன் வீட்டு வாசலில் கூட்டமாக இருந்து வந்தது. அப்போது என்ன நடந்தது என்று தெரியவில்லை என்றும், தனது உரிமையாளருக்கு சிகரெட் வாங்கி சென்றதாகவும், வீட்டின் முன் கதவு பூட்டியிருந்தது என்றும், வீட்டின் பின்புறம் வழியாக சென்று அ.சா.1-னிடம் சிகரெட் கொடுத்ததாகவும், அப்போது, அ.சா.1 தபால் ஒன்றை கொடுத்து, வால்பாறை காவல் நிலையத்தில் கொடுக்குமாறு கூறினார். அ.சா.1 தன்னிடம் ஒரு வெற்று தாளில் கையொப்பம் பெற்றார் என்றும், தான் காவல் நிலையம் சென்று அ.சா.1 கொடுத்த தபாலை கொடுத்துவிட்டதாகவும், பின்னர் என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும் பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

16. மேலும், அ.சா.2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையில்,

**" அ.சா.1-னின் வீட்டு முன்பு நின்றிருந்தவர்கள் எதற்காக அங்கு இருந்தார்கள் என்று அது எனக்கு தெரியாது. அந்த சமயத்தில் அ.சா.1 மனைவியான 1-ம்எதிரியும், மகனான 2-ம் எதிரியும் அங்கு இருந்தார்களா**

**என்றால் நான் பார்க்கவில்லை."** – என சாட்சியமளித்துள்ளார்.

17. அ.சா.3 தன் சாட்சியத்தில், அ.சா.1–க்கும், 1–ம் எதிரிக்கும் இடையே குடும்ப பிரச்சனை இருந்ததாகவும், மேலும், அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டை பற்றி தெரியாது என்றும், சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லை என்றும் பிறழ்சாட்சியமளித்துள்ளார்.

18. அ.சா.5, அ.சா.6, அ.சா.7 கேள்விப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். இவர்கள் தங்களது சாட்சியத்தில், அ.சா.5 கிராம நிர்வாக அதிகாரி, அ.சா.6 கிராம உதவி ஆய்வாளர், அ.சா.7 வனக்காவலர் ஆகியோர்கள் அ.சா.1–ஐ அவரது எஸ்டேட்டில் பணிபுரியும் தொழிலாளர்களும், அவரது குடும்பத்தாரும் அவர் எஸ்டேட்டில் உள்ள அறையில் வெளியில் வரவிடாமல் தடுத்ததாகவும், தகவல் தெரிந்து சம்பவயிடம் சென்று சம்பவயிடத்திற்கு DSP, காவல் ஆய்வாளர், வட்டாட்சியர் ஆகியோர்கள் வந்ததாகவும், எதிரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி அ.சா.1–ஐ மீட்டு வந்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள்.

19. மேலும், அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில்,

**" வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்."** – என்றும்,

அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில்,

**" சம்பவம் குறித்து தகவல் கிடைத்ததற்கு பின்பு தாங்கள் சம்பவயிடம் சென்றோம் என்றால் ஆமாம். சம்பவயிடம் சென்று நாங்கள் பேச்சு வார்த்தை நடத்தினோம். யாரிடம் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் பொது மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினோம். எது பற்றி பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் அது பற்றி தெரியாது.................................................................... நான் சம்பவயிடத்திற்கு செல்வதற்கு முன்பு போலீசார்கள் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள். நாங்கள் சம்பவயிடத்தில் யாரிடம் பேச்சு வார்த்தை நடத்தினோம் என்றால் மதனகோபால் மற்றும் அவரது மனைவியிடம் பேச்சு வார்த்தை நடத்தினோம். "** – என்றும்,

அ.சா.7 தனது முதல் விசாரணையில்,

**" அங்கு எஸ்டேட் தொழிலாளர்கள் உரிமையாளர் வீட்டின் முன்பு அமர்ந்திருந்தார்கள். எதற்கு அமர்ந்திருந்தார்கள் என்று தெரியாது. DSP சார் , தாசில்தார் சார் ஆஜர் 1–ம் எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தார்கள். மக்கள் கலைந்த பின்பு நாங்கள் வந்துவிட்டோம். மதனகோபாலை நான் சம்பவயிடத்தில் பார்க்கவில்லை"** – என்றும் அளித்துள்ள சாட்சியங்களை பரிசீலிக்கும் போது,

அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

20. அ.சா.4, அ.சா.8 பார்வை மகஜர் சாட்சிகள் ஆவார்கள். அ.சா.4 போலீசார் தன்னிடம் எஸ்டேட்டில் வைத்து அ.சா.ஆ.2 கையொப்பத்தை வாங்கினார் என்றும், எதற்காக வாங்கினார் என்று தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், அ.சா.8 தன் சாட்சியத்தில், போலீசார் ஸ்ரீராம் எஸ்டேட்டில் அமர்ந்து மேப் வரைந்து கொண்டிருந்தார்கள் என்றும், எதற்காக வந்தார்கள் என்று தெரியவில்லை என்றும், தன்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டதால் அ.சா.ஆ.3 கையொப்பம் செய்ததாகவும், தன்னுடன் வேறு யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியம் அளித்துள்ள அ.சா.2 முதல் 4 மற்றும் அ.சா.8 சாட்சிகளை அரசு தரப்பிலும், எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை செய்த போதிலும், அரசு தரப்பிற்கு ஆதரவாக இவர்களது சாட்சியம் இல்லை.

21. மேலும், புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், சம்பவத்திற்கு மறுநாள் வால்பாறை காவல் நிலையம் வந்து, அ.சா.ஆ.1 புகார் மனுவை அளித்ததாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.9 உதவி ஆய்வாளர், அ.சா.1–ன் ஓட்டுநர் ஜெயக்குமார் மூலம் கொடுத்தனுப்பிய புகார் மனுவை பெற்று, நிலைய மனு ரசீது எண்.30/2022 பதிவு செய்ததாகவும், அ.சா.10, அ.சா.7 கொடுத்த மேற்படி மனு ரசீது எண்.30/2022 –ன் படியான புகார் மனு மீது அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்கள். ஆனால், அ.சா.2 சொந்தில்குமார் என்பவர், அ.சா.1 தன்னிடம் தபாலை கொடுத்ததாகவும், அதை வால்பாறை காவல் நிலையத்தில் தான் சென்று கொடுத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தது குறித்து முன்னுக்கு பின் முரணாக அளித்துள்ள சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

22. எனவே, மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் 1–ம் எதிரியின் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் கீழான குற்ற சாட்டுக்களை அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி 1–ம் எதிரியின் மீது

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:13:33 +0530

இ.த.ச.பிரிவுகள் 148, 348 , 506(ii) ன் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23, 24–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 452, 506(ii) ன் படியும், 10, 18–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 294(b) , 348, 506(ii) ன் படியும், 3, 5, 6, 7, 8, 9, 11, 13, 15, 16, 19, 20, 22–ம் எதிரிகள் மீது இ.த.ச.பிரிவுகள் 148, 348, 506(ii) ன் படி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச.பிரிவு. 248(1)–ன் கீழ் 1 முதல் 24 எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கப்படுகிறது.

2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 17–ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:13:40 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | மதனகோபால் |
| அ.சா.2 | செந்தில்குமார் |
| அ.சா.3 | வினோத்குமார் |
| அ.சா.4 | பொன்னர் |
| அ.சா.5 | பன்னீர்செல்வம் |

| | |
|---|---|
| அ.சா.6 | ஈஸ்வரன் |
| அ.சா.7 | சிம்சன் |
| அ.சா.8 | ஜெயக்குமார் |
| அ.சா.9 | சபரிமுத்து (உதவி ஆய்வாளர்) |
| அ.சா.10 | குணசேகரன் (உதவி ஆய்வாளர்) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ. 1 – புகார் மனு
2. அ.சா.ஆ. 2 – பார்வை மகஜரிலுள்ள 1– வது கையொப்பம்
3. அ.சா.ஆ. 3 – பார்வை மகஜரிலுள்ள 2– வது கையொப்பம்
4. அ.சா.ஆ. 4 – முதல் தகவல் அறிக்கை
5. அ.சா.ஆ. 5 – பார்வை மகஜர்
6. அ.சா.ஆ. 6 – மாதிரி வரைபடம்
7. அ.சா.ஆ. 7 – பிரிவு மாற்றம் அறிக்கை

**சான்றுப் பொருட்கள்**:– இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்**:– இல்லை.

**குறிப்பு:–**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
3. தீர்ப்பின் நகல் மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், கோயம்புத்தூர்– அவர்களுக்கு பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:13:47 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,வால்பாறை.